தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2019 கடகம்-மடங்கல் (15-8-1988) ஓர் உருபா (இதழ் எண்: 108)

தமிழர்க்கு வாழ்வுரிமைகளும் தனிநாடும் கிடைத்துவிடக் கூடாதென்பதே இந்தியாவின் கொள்கை!

தீட்சித் இதைத் தெளிவு படுத்தினார்.

அதனால்தான் தனிஈழக் கோரிக்கையை இந்தியா ஆதரிக்க வில்லை.

ஆனால், தமிழீழத்தை மீட்டெடுப்பதே புலிகளின் உயிர்க் கொள்கை!

கடந்த 16-7-88. செவ்வாயன்று கொழும்பில் 'இந்திய — இலங்கை ஒப்பந்தத்தின் ஓராண்டுக் காலம்' என்ற தலைப்பில் வெளிநாட்டுச் செய்தியாளர் கழகத்தின் சார்பில் கருத்தரங்கம் ஒன்று நடைபெற்றது. அங்கு இந்திய உயர்ஆணையர் தீட்சித் பேசும் பொழுது, "இந்திய — இலங்கை ஒப்பந்தத்தை நீக்கி விட்டுத், தமிழீழப் போராளிகளிடம் இலங்கை நேரடியாகத் தொடர்பு வைத்துக் கொண்டால் தமிழீழம் உருவாவதை யாராலும் தடுக்க முடியாது. இப்படியொரு நிலைமை உருவாகி விடக் கூடாதென்பதே இந்தியாவின் நோக்கம். அதில் இந்தியா எச்சரிக்கையாக இருக்கிறது" என்று, இந்தியாவின் கரவான உள்நோக்கத்தைச் தெளிவு படுத்தினார்.

அவர் மேலும் பேசுகையில் இலங்கைத் தொடர்பான இந்தியாவின் கொள்கைகளைப் பல வகையிலும் வெளிப்படுத்தித் தெளிவாகப் பேசியுள்ளார்.

"இலங்கை மாகாணங்களுக்குக் கூடுதல் அதிகாரம் தரப்பட வேண்டும் என்ற சிக்கலுக்குக் காலப் போக்கில் தீர்வு ஏற்படும். அதற்காக விடு

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

பேச்சுகளே திட்டங்களா? திட்டங்களே செயல்களா? செயல்களே விளைவுகளா? விளைவுகளே பயன்களா?

(நம் அரசியல் தலைவர்கள் கற்பனையாகவும் கவர்ச்சியாகவும் ஏராளமாகப் பேசி அன்றுடம் மக்களை மகிழ்ச்சி கொள்ளச் செய்கிறார்கள். பெரும்பாலும் அவர்கள் மக்களுக்குச் செய்ய வேண்டும் என்பவெல்லாம் வெறும் பேச்சளவிலேயே நிற்கின்றன. பேச்சுகளே செய்திகளாக வானொலியும் வானொளியிலும் சொல்லப் படுகின்றன. அவை ஆயிரத்தில் ஒன்று கூட செயல்களாக உருப் பெறுவதில்லை. அவ்வாறு செய்யப்பெறும் செயல்கள் அனைத்தும் அவர்கள் எதிர் பார்த்த அல்லது திட்டமிட்டபடி விளைவுகளைத் தருகின்றனவா என்பது ஐயமே! இறுதியில் அவை அப்படியே விளைந்தாலும் பொதுமக்கள் அவற்றால் பயன் பெறுகின்றனரா? இல்லை என்பதற்கு ஏராளமான எடுத்துக் காட்டுகளைச் சொல்லலாம். இப்பகுதிக்கு நீங்களும் எழுதலாமே!)

அண்மையில் இராசீவ் சொன்னது!

பல திட்டங்களுக்காக நடுவண் அரசால் ஒதுக்கப்படும் தொகைகள் முழுவதுமாக அடைய வேண்டிய பொதுமக்களைச் சென்று அடைவதில்லை. நடுவண் அரசு 6 உருபா மக்களுக்காகச் செலவழிக்குமானால் அதில் ஓர் உருபாதான் மக்களுக்குச் சென்று சேர்கிறது.

தில்லியில் ஏற்பட்ட கக்கல்கழிச்சல்(காலரா)! பாராளுமன்றத்தில் பேசிய பேச்சுகள்.

'காலரா'வுக்கு இன்னமும் மக்கள் பலியாகி வருவது பெரிதும் வருந்தத் தக்கது.... தில்லி ஆளுநர் பதவிவிடுப்பும் அதிகாரிகள் சிலரின் பதவி நீக்கமும் இதற்குத் தீர்வு ஆகிவிடாது.... நோயால் இறந்த மக்கள் தொகை பெரிது... சேரி-வாழும் மக்களைப் பற்றித்தான் அரசு கவலைப்படுவதில்லையே! ஆனால் தேர்தலின் போது சேரிகளை அரசு விழுந்து விழுந்து கவனிக்கும்.... பெரிய அளவு திட்டம் என்பது போன்ற சொல் மாயங்களால் ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகள் கிடைத்து விடுவதில்லை. நோய் தாக்கப் பட்ட பகுதிகளை மாநகராட்சி நீண்டகாலமாகப் புறக் கணித்ததால்தான் இந்த அளவில் சாவுஎண்ணிக்கை ஏற்பட்டுள்ளது.

அரசு நிறுவனத்தில் 13 கோடி இழப்பு:

அலகாபாதில் உள்ள பாரத குழாய்கள், வளி உருளைகள் நிறுவனம் கடந்த 16 ஆண்டுகளில் 13-69 கோடி இழப்பு அடைந்துள்ளது. அதன் தணிக்கை அறிக்கையில் இவ்வாறு கூறப் பெற்றுளளது:

"அந்த நிறுவனத்தின் திட்டப் பணிகள் குறிப்பிட்ட காலத்தில் தொடங்கப் படவில்லை, வரையறுக்கப் பெற்ற உருவாக்கத்திறன் எட்டப்படவில்லை, தேவைக்கதிகமான ஊழியர்கள், தொழிலாளர்கள் அமர்த்தப்பட்டும் அவர்கள் போதுமான திறமையுடன் பணிசெய்யவில்லை. கடன் நிலுவை தரப் பெறவில்லை. இங்கு உருவாகிய பொருள்கள் சரியில்லை யென்று தள்ளப்பட்டுள்ளன. தேவையான பொருள்களை வேண்டுவோர்க்கு அவை காலத்தில் அனுப்பப்படவில்லை. சில பொருள்களை 6 ஆண்டுகள் காலந் தாழ்த்தி அனுப்பியிருக்கிறார்கள். மாதந்தோறும் 12,500 வளி உருளைகள் உருவாக்கி அந்நிறுவனம் அனுப்ப வேண்டும். ஆனால் கடந்த இரண்டாண்டுகளில் அது ஓர் உருளையைக் கூட அனுப்பவில்லை."

எப்படி அரசு நிறுவனங்கள் இயங்கும் அழகு? இழப்பு அரசுக்கன்று, வரிகட்டும் பொதுமக்களுக்கு!

10 கோடி படித்த இளைஞர்க்கு வேலையில்லை:

நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகிறது. இந்த நூற்றாண்டின் இறுதியில் உலகில் வேலையில்லாமல் இருக்கும் மக்கள் தொகையில் மூன்றில் இருபகுதியினர் இந்தியாவில் இருப்பர் என்று அனைத்துலகத் தொழிலாளர் அமைப்பின் ஆய்வு கூறுகிறது.

7-ஆவது 8-ஆவது திட்டங்களிலேயே வேலை வாய்ப்புகள் பெருகத் திட்டமிடப் பெற்றுள்ளது. ஆனால் பயன் ஒன்றும் இல்லை. தொழிற்சாலைகளில் தானியங்கி இயந்திரங்கள், கணிப்பொறிகள் பெருகுவதால் இலக்கக் கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்கிறார்கள். மேலும் இருந்த தொழிற்சாலைகள் பல மூடப்பட்டன; அல்லது பல வேலை நிறுத்தங்களில ஈடுபட்டுள்ளன. இவற்றாலும் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகுகிறது. இதனால் அண்மை எதிர் காலத்தில் இளைஞர்களிடையில் கொடுமையான விளைவுகள், கொந்தளிப்புகள் உருவாகலாம் என்று அஞ்சப்படுகிறது.

ஆட்சித் திட்ட உண்மையின் அவலங்கள்:

அண்மையில் தமிழக ஆளுநர் தென்னிந்திய வணிகர்கள் அவை அரங்க விழாவில் கீழ்வருமாறு கருத்தறிவித்தார்.

"தனிஆள் அலைகளால் மக்கள் கவரப்பட்டு அரசியலில் பொறுப்பற்றவர்களை ஆளுகைக்குக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் ஆட்சிக்கு வந்த

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

தலைப் புலிகளுடன் இந்தியா பேச்சு நடத்தி வருகிறது. ஆனால் இந்திய — இலங்கை ஒப்பந்தத்தைத் தவிர்த்து விட்டு, இலங்கை, விடுதலைப் புலிகளுடன் தானே புதிய பேச்சுகளைத் தொடங்கினால், தனி ஈழம் உருவாவதைத் தடுக்க முடியாது" என்று தீட்சித் இலங்கையை எச்சரித்துள்ளார்.

இவ்வெச்சரிக்கை, இந்தியாவின் மறைமுக வல்லதிகாரக் கொள்கையை உறுதிப் படுத்துவதுடன், புலிகளைக் காட்டி, இலங்கை ஆட்சியை எப்பொழுதும் தன் கைக்குள்ளேயே வைத்திருக்க விரும்புகிறது என்பதையும் வெளிப்படுத்துகிறது. அத்துடன் போராளிகளுக்கும் இலங்கை ஆட்சிக்கும் ஒரு நல்லுறவு ஏற்படுவதையோ, அதன் வழி இலங்கையில் அமைதியான ஆட்சி நடைபெறுவதையோ, இவற்றினால் தமிழினத்திற்கு ஒரு நல் விளைவு உருவாவதையோ விரும்பவில்லை என்பதையும் இப் பேச்சு தெளிவாகக் காட்டுகிறது. அதில் அச்சுறுத்தல் உணர்வும் கலந்தே இருப்பதையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இனி, தீட்சித் மேலும் பேசுகையில், இந்திய ஆட்சியினரின் உள்மனத்தில் அழுந்திக் கிடக்கும், "தமிழர்க்கு இறைமை ஆட்சி உரிமைகள் உள்ள ஒரு நாடு கிடைக்கவே கூடாது" என்னும் கரவான எண்ணத்தை வெளிப்படுத்துகிறார். அவர் பேச்சைக் கவனியுங்கள்.

"**இலங்கையில்** (அல்லது இந்தியாவிலுமோ வேறு எங்குமோ) **தமிழர்களுக்கென தனிநாடு ஒன்றை உருவாக்குவது இந்தியாவின் நோக்கமன்று.** (இதைத்தான் நாம் கடந்த முப்பது ஆண்டுகளாக நம் மக்களுக்குக் கூறி வருகிறோம். அதை இப்பொழுது தீட்சித் (அஃதாவது இராசீவ் பரம் பரையினர் கருத்தை) உறுதிப்படுத்திக் கூறுகிறார். இதை நம் வீடணத் தமிழர்கள் மூப்பனாரும் சிதம்பரங்களும் கவனிக்க வேண்டும். இனி இன்னும் தீட்சித் கருத்தை உண்மைத் தமிழர்கள் கவனிக்க வேண்டும்.) **இலங்கையில் பிரிவினையை உருவாக்குவதற்கான வேலையில் இந்தியா உடைந்து சிதறுவதற்கான தொடக்கப் பணிகளைத் தொடங்கியதாகத்தான் பொருள்.... தனி ஈழக் கோரிக்கையை** (அஃதாவது தனிஈழம் அமைவதை) **இந்தியா ஒருபோதும் ஆதரித்ததில்லை. தனிஈழக் கோரிக்கையை ஏற்பதென்பது இந்தியா இதுவரை எந்தக் கொள்கைகளுக்காக வழக்காடியதோ,** (அஃதாவது இந்தியா ஆரிய இனத்தவர்களாலேயே நிலையாக ஆளப்பெற வேண்டும் என்பதுதான் அவர்கள் கொள்கை — என்பதைத் தமிழர்கள் இப்பொழுதேனும் விளங்கிக் கொள்க) — **அவை அனைத்தையும் தவிர்ப்பதாகும். பிளவுடாத பல இன மக்களைக் கொண்ட நாட்டையே இந்தியா எப்பொழுதும் வலியுறுத்தியுள்ளது.** (எப்பொழுதும் என்றால்; வரலாற்றுக் காலத்திலிருந்தா? இல்லையே, அப்பொழுதெல்லாம், இந்தியா ஒன்றாக இருந்ததில்லையே! இந்திய ஆரியர் தங்கள் கைகளில் ஐரோப்பிய ஆரியர்கள் இந்திய ஆட்சி உரிமையை (சுதந்திரத்தை) ஒப் படைத்ததிலிருந்து தானே, — இந்தக் கரவான ஓரின நுகர்வுரிமையை — (ஏக போக சுதந்திரத்தை) பிற இனத்தவர்களுக்கு விட்டு விடக் கூடாது; நிலை நாட்டிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தோன்றி யிருக்க முடியும். நேரு, அவருக்குப் பின் அவர் மகள், அவருக்குப் பின் அவர் பெயரன் என்னும் வரிசையில் வந்த வலியுறுத்தம் தானே அது.)

தீட்சித்தின் இந்தக் கருத்துக்கு இலங்கை மகாவேலி மீவளர்ச்சி (அபிவிருத்தி) அமைச்சர், காமினி திச்சநாயக, அக் கருத்தரங்கிலேயே தன் உணர்வு ஒப்புதலை அளித்துக் கீழ்வருமாறு கருத்தறிவித்திருக்கிறார்.

'திராவிடர்கள் (அஃதாவது தமிழர்கள்) பல முறை இலங்கை மீது படையெடுத்தனர். ஆனால் சிங்கள அரசன் **துட்டகைமுனு** திராவிட (தமிழ்) அரசன் ஒருவனை முறியடித்து உரிமை இலங்கையை ஏற்படுத்தினான். (அதற்கு முன் இங்கையின் பெரும்பகுதி தமிழரசர் கையிலும், ஒரு சிறு பகுதி (மேற்கே) சிங்கள அரசரின் கையிலும் இருந்தன. துட்டகைமுனு என்பவன் இராசீவ் போன்ற ஆரிய இன வெறியன். அவன் கைக்கு இலங்கை வந்த பின்தான் சிங்களவர் ஆட்சியை, இப்பொழுது இராசீவ் செய்கிற முயற்சியைப் போல் செய்து நிலைப் படுத்திக் கொண்டான்.) அந்தச் சிங்கள அரசன் (துட்டகை முனுவின்) அரத்தம் ஒரு துளியாவது நம் அனைவரின் உடலிலும் ஓடிக் கொண்டுள்ளது." என்றார் (துட்டகை முனுவின் அரத்தம் சிங்களவன் உடலில் இன்றும் ஓடினால், பாண்டியன் நெடுஞ் செழியன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், பனிமலை நெற்றியில் புலிபொறித்த கரிகாற் பெருவளத்தான் — ஆகியோர் அரத்தங்கள் தமிழினத் தவர்களின் உடல்களில் ஓடக் கூடாதா, என்ன?)

இனி, அக்கருத்தரங்கில் பேசிய இலங்கை உரிமை (சுதந்திர)க் கட்சி உறுப்பினர் அனில் சிங்கே, இந்திய — இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்து (ஆனால், தமிழர்களுக்குச் சார்பாக அன்று), தீட்சித்துக்கு விடை கூறும் வகையில் கீழ்வருமாறு பேசியதும் நாம் நினைவில் வைக்கத் தக்கது.

"இலங்கைக் குடிமக்களில் 95 விழுக்காட்டுப் பேர் ஒப்பந்தத்தை ஆதரிக்கவில்லை. இலங்கை உச்சநெறி மன்றம் கூட ஒருமனதாக அதை ஆதரிக்கவில்லை. நடுவர் சிலர் ஒப்பந்தத்திற்கு எதிரான கருத்தையே தெரிவித்துள்ளனர்.... வங்கதேசப்

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

செய்தி :

பாசிச எதிர்ப்பு இயக்க மாநாடு :

பாசிச எதிர்ப்பு இயக்கத்தின் சார்பில் நான்கு அரசியல் கோரிக்கைகளை முன்னிருத்தி சூலை 23, 24 ஆகிய பக்கல்களில் ஈரோடு கொங்கு கலையரங்கில் நடைபெற்ற மாநாடு பல்வேறு அமைப்புகளின் ஆதரவுடன் வெற்றியாக நிறைவுற்றது.

59-ஆவது அரசியல் சட்டதிருத்தம் மற்றும் அனைத்துக் கருப்புச் சட்டங்களையும் திரும்பப் பெறக் கோரியும், பஞ்சாபில் அடக்குமுறைகளை நிறுத்தி அரசியல் தீர்வு காணக் கோரியும், இலங்கையில் குவிக்கப்பட்டுள்ள இந்திய வன்கவர்பு (ஆக்கிரமிப்பு)ப் படையைத் திரும்பப் பெறக் கோரியும், ஊழல் இராசீவ் மீது வெளிப்படையான உசாவல் நடத்தக் கோரியும் இந்த மாநாடு நடத்தப் பட்டது.

முன்னாள் உச்ச நெறிமன்ற நீதிபதி வி. ஆர். கிருட்டிண(ய்ய)ர், முன்னாள் நடுவண் அமைச்சர் சியார்சு பெர்னாண்டசு உள்ளிட்ட நாற்பதுக்கும் மேற்பட்ட அமைப்புகளின் படி நிகராளிகள் மற்றும் தனியார் குடிநாயகக் கருத்தாளர்களுடன் மூவாயிரம் பாசிச எதிர்ப்பு இயக்கப் படிநிகராளிகள் இம் மாநாட்டில் பங்கேற்றனர்.

23-7-88. காலை 7.30 மணிக்கு இந்திய உரிமைப் போராட்ட வீரர் க. ரா. நல்லசிவம் (முன்னாள் ச. ம. உ) அவர்கள் தலைமையில் ஈகி (தியாகி) களுக்கு விரவணக்கம் செலுத்தப்பட்டு உறுதி மொழி எடுக்கப்பட்டது. பாசிச எதிர்ப்பு இயக்கக் கொடியேற்ற நிகழ்ச்சி உரிமைப் போராட்ட வீரர் எம். ஆர். எசு. மணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பாசிச எதிர்ப்பு இயக்க முன்னவர் பி. வி. இராமானுசம் அவர்கள் கொடியேற்ற, கொடிப்பாடல் இசைக்கப்பட்டது.

பகத்சிங் அரங்கில் மக்கள் உரிமைக் கழகத் தலைவர், பி. வி. பக்தவத்சலம், பகத்சிங் உருவப் படத்தைத் திறந்துவைத்து மாநாட்டைத்தொடக்கி வைத்தார். மாநாட்டினை வாழ்த்தியும், மாநாட்டுக் கோரிக்கைகள் மீது தங்கள் ஒருமைப்பாட்டைத் தெரிவித்தும் கேரள கே. பி. ஆர். சி அமைப்பின் பொதுச் செயலாளர் வழூர் விசுவம், நாக்பூர் சி. பி. டி. ஆர் — இன் இணைச் செயலர் சந்திரா, குசராத் எல்.எ.எசு. அமைப்பைச் சார்ந்த பர். ரவிசின்கா, பர். நரேந்திரசிங் (மைசூர்), ஈரோடு நகராட்சித் தலைவர் அரங்கராசன் (திமுக), புரட்சி மாணவர் முன்னணி சார்பில் சுகதேவ், புரட்சித் தொழிலாளர் முன்னணி சார்பில் பாலன் ஆகியோர் பேசினர்.

இதைத் தொடர்ந்து நெல்சன் மாண்டலோ ஓவிய அரங்கினை மக்கள் குடி நாயக உரிமைக் கழகத் தலைவர் 'நீண்டபயணம்' சுந்தரம் திறந்து வைக்க, மக்கள் கலையிலக்கியக் கழகப் பொதுச் செயலர் மண்டலோ அரங்க ஓவியங்கள் பற்றி விளக்கவுரை நிகழ்த்தினர்.

பகல் 1 மணியளவில் 59-ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தையும், அனைத்துக் கருப்புச் சட்டங்களையும் நீக்கம்செய்யக் கோரி, வழக்கறிஞர் ஞானம் தலைமையில் கருத்தரங்கு தொடங்கியது. இதில் தொடக்க உரையாற்றினர் முன்னாள் உச்ச நெறிமன்ற நடுவர் வி. ஆர். கிருட்டிண(ய்ய)ர். அவரைத் தொடர்ந்து தமிழக முன்னேற்ற முன்னணியின் மாநிலத் தலைவர் ஆர். எம். கிருட்டிண ராசு, ஓ. பி. டி. ஆர். (ஆந்திரா) அமைப்பின் பொதுச் செயலர் பாசுகரன், மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சித் தலைவர் ஆனைமுத்து, தென்மொழி ஆசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆகியோர் 59-ஆவது சட்டத் திருத்தத்தைக் கண்டித்தும் பாசிச எதிர்ப்பு இயக்கத்துடன் தமது ஒருமைப் பாட்டைத் தெரிவித்தும் சிறப்புரை நிகழ்த்தினர்.

மாலை 5 மணியளவில் பஞ்சாபில் அடக்குமுறைகளை நிறுத்தி அரசியல் தீர்வுகாணக் கோரி தோழர் பி. வி. இராமானுசம் தலைமையில் கருத்தரங்கு தொடங்கியது. சியார்சு பெர்னாண்டசு, தொடக்கவுரையாற்றினர். பர். அரவிந்தகோசு (P. R.O, டெல்லி), ஈழவேந்தன் (பொதுச் செயலர் டி. ஈ. எல். எப்), வழக்கறிஞர் மணிமாறன் ஆகியோர் இக்கோரிக்கையை வலியுறுத்திப் பேசினர்.

இரவு 8 மணியளவில் பாடல்களும், பாசிச எதிர்ப்பு இயக்கக் கலைக்குழுவின் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

மாநாட்டின் இரண்டாவது நாள் 24-7-88 அன்று காலை 8 மணிக்கு 'ஊழல் இராசீவ் மீது வெளிப்படை உசாவல்' என்ற தலைப்பின் கீழ் பாவலர். இன்குலாப் தலைமையில் பாட்டரங்கம் நடத்தப்பட்டது.

இதனை அடுத்து, தோழர்கள் பாரதி(பு.தொ.மு, ஏ. எசு. குமார் (குடிநாயக உணர்வு விடுதித் தொழிலாளர் சங்கம்) சத்யநாராயண (ஆந்திரா) நாராயணன், கே. என். இராமச்சந்திரன் (கேரளா), கீதா மேனன் (பெங்களூர்), சேவற்கொடியோன், (பு. வி. வி. தொ. மு) ஆகியோர் பேசினர்.

மதியம் 12.00 மணிக்கு, இலங்கையிலிருந்து இந்தியப் படையினரைத் திரும்பப் பெறக் கோரி தோழர் அரிமா தலைமையில் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. காமராசு பேராயத் தலைவர், ப. நெடுமாறன், தொடக்கவுரையாற்றினர்.

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

(முன்னிதழ்த் தொடர்ச்சி.)

இவர்களை ஆளவிட்டால் நாடு சுடுகாடாகும்!

- அதியமான் -

இவர்கள் கையில் ஆட்சி அகப்பட்டால் மக்கள் வாழ முடியுமா? இந்த நலவாழ்விகளுக்கு எதுவும் தெரியாது. மக்கள்மீது இவர்களுக்கு அன்பே இருக்காது. பின் எங்கே மக்களைக் காப்பர்? கோடி கோடியாய்ப் பணத்தைச் சேர்த்துக் கொண்டு மக்களை ஏழைகளாக்கக் கண்டு, மகிழ்வர். இதுதான் இவர்கள் இந் நாட்டிற்குச் செய்யும் விளைவுகள். இந் நாட்டு மக்களுக்கு நூல் சேலையும், செருப்பும், மட்டமான பகலுணவும் போதும்! மற்றவை யாவும் கடவுள் எழுதிய எழுத்துப் படி நடக்கும் என்று உறங்கி விடுவார்கள். இவர்களின் மூளைப் பெட்டிக்குள் மூடக் கொள்கைகள் பாதுகாப்பாக இருப்பதால் இவர்களை எளிதில் ஏமாற்றி விடலாம் என்பதே நாற்பது ஆண்டுகளாய் நாம் கண்ட காட்சிகள்.

இந் நாட்டில் பேசும் படங்களில் நடித்தவர்களே அரசியல் தலைவர்கள். அவர்கள் ஆளும் வாய்ப்பைப் பெறமுடியும் என்ற நிலை ஏற்பட்டு விட்டது. அரசியலுக்குள் மிக எளிதாக நுழையும் வாயிலாகப் பேசும படங்கள் அமைந்து விட்டன. நடிகர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை நன்கு அறிவோம். மேனி மினுக்கிப் பகட்டான வாழ்க்கையில் வாழ்கிறவர்கள் ஏழைகளைப் பற்றியும் அறியார். எளிமையையும் என்னவென்று அறியாத தந்நலக்காரர்கள். இவர்கள் உலகவரலாற்றையும், மாந்தர் வரலாற்றையும் கற்றறியாத, கல்லாதார் நிலையில் நிலைத்து நிற்பவர்கள். எழுதிக் கொடுத்ததை ஒப்புவிக்கும் கிளிப்பிள்ளைகள். இவர்களைக் கண்டு, சிந்தனை செய்யமாட்டோம் என்பவர்கள் ஏமாறுகிறார்கள். வாழ்க்கை பிரமன் எழுதிய எழுத்தின் எழுத்துப்படி நடக்கும் என்று குப்புறப்படுத்துக் கொண்டு அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்று, ஏமாறுவதும் எல்லாம் அவன் செயலே என்று கண்ணை நன்றாகமூடிக் கொண்டவர்கள்.

எனவேதான் இப்படிப் பட்ட கூத்தடிப்புகளும் கொள்ளையடிப்புகளும் நடக்கின்றன. நாட்டுமக்கள் மீது அன்பு கொண்டவர்கள், மக்களிடத்தில் ஒரு விழிப்பை உண்டாக்க முன் வர வேண்டும். அல்லாக்கால் இந்த அரசியல் வழக்கர் ஆளும் வாய்ப்பைப் பெற்று விட்டால் எல்லோரும் சேர்ந்து துன்பத்தை நுகர வேண்டியதுதான். அவர்கள் 'விதி' யென்றிருந்து விடுவார்கள். உன்னிப் பார்ப்போர் அப்படி இருக்க இயலாது. இந்தப் பகட்டர்கள் ஆளும் நிலத்தில் உணர்ச்சி உள்ளவர் எண்ணி எண்ணி அரத்தக் கொதிப்பில் சாக வேண்டிவரும்.

எனவே தமிழ்நாட்டு மக்களே! உங்கள் ஒப்போலைகளைப் பெற இத்தனைப் பகட்டுகள் வேண்டுமா என சற்று எண்ணிப்பாருங்கள். மக்கள் நலனுக்கு இன்ன இன்ன செய்வோம் என்று அவர்கள் கூறுகிறார்களா? கேட்டுப் பாருங்கள். முருகனும், விநாயகனும் பழம் எனக்குத்தான் வேண்டும் என்று போட்டுக் கொண்ட சண்டை போலல்லவா இருக்கிறது. இது தேவையே இல்லை. இவ்வளவு பணத்தையும் வைத்து வேலையற்றவர்களுக்கு வேலை வாய்ப்பை உண்டாக்கலாமே. பல தொழிற் சாலைகளை உருவாக்கி நாட்டை வளப்படுத்தலாமே. நாட்டில் எத்தனையோ சீர்த்திருத்தங்கள் செய்யவேண்டியுள்ளன; அவற்றை நிறைவு செய்யலாமே. அவற்றை எண்ணிப்பார்க்காமல் வீண் வெளிச்சம் போடும் நடிப்பு அரசியல் வழக்கர்களை நாட்டை ஆளவிடாமல் செய்யுங்கள் அல்லது நாடு சுடுகாடாகும்!

வழக்குமன்ற நடவடிக்கைகளுக்குப் பொருளுதவி செய்யுங்கள்!

அண்மையில், எதிர்பாராத வகையில், நம் உ. த. மு. க. இயக்க அன்பர்களில் ஒரிருவர், கழக முதல்வரின் கருத்துக்கு மாறாகவும் நம் இயக்க நடைமுறைகளுக்கு வேறாகவும், செய்த சில தேவையற்ற செயற்பாடுகளால், நம் இயக்கத்திற்கு அரசினராலும் காவல் துறையாலும், பெரிய தாக்கம் நேர்ந்துள்ளது. அதற்கென அகத்தும் புறத்தும், எச்சரிக்கையாக, இயக்க நன்மையையும் எதிர்கால நிலைப்பாட்டையும் செயற்பாட்டையும் கருதி, சில வழக்கு மன்ற நடவடிக்கைகள் எடுக்கப் பட்டும், எடுக்க வேண்டியும் உள்ளன. அவற்றுக்கெனப் பல்வேறு வகையில் பொருட் செலவு நேர்ந்துள்ளது; நேரவும் இருக்கிறது.

அதனை மனத்தில் கொண்டு, **தென்மொழி, தமிழ்நிலம்** அன்பர்களும், உ. த. மு. க. ஆர்வலர்களும் தங்களால் இயன்ற பொருளுதவியைத் **தென்மொழி ஆசிரியர்** அவர்களின் பெயருக்கு நன்கொடையாக அனுப்பி உதவ வேண்டுகின்றேன்.

அன்பர்கள் இத் தொல்லையைப் பொறுத்துக் கொள்ளவும் கேட்டுக் கொள்கிறேன்.

தென்மொழி	அன்பன்
சென்னை	பெருஞ்சித்திரனார்.
30-6-88.	ஆசிரியர்.

தொடர் (5.)

"தமிழீழ மக்கள் விடுதலைப் புரட்சியும், இந்தி(ய) வல்லரசின் சூழ்ச்சிகளும்"

-- செ. அமிழ்தன். --

கருவி ஒப்படைப்பும் புலிகளின் நிலைப்பாடும்:

உடன்பாட்டை ஏற்றுக் கொண்ட புலிகள் இயக்கம் தாம் கருவி ஒப்படைப்பைப் பின்வரும் வகையில் மூன்று கட்டங்களில் மேற்கொள்வதாகத் தில்லியரசுக்கு வேண்டுகோள் விடுத்தது.

அ. உடன்பாட்டை ஏற்றுக் கருவிகளை ஒப்படைப்பதற்கு அறிகுறியாக முதற்கட்டமாக ஒப்படைப்பதாகவும்,

ஆ. உடன்பாட்டில் கூறப்பட்டுள்ள இடைக்கால அரசு உருவாக்கப்பட்ட பிறகு இரண்டாம் கட்டமாக ஒப்படைப்பதாகவும்,

இ. உடன்பாட்டில் வலியுறுத்தப் பட்டுள்ள வடக்கு — கிழக்கு மாகாணங்கள் இணைந்த தமிழ் மாநிலம் உருவான பிறகு மூன்றாம் கட்டமாக ஒப்படைப்பதாகவும்,

தெரிவித்திருந்தது. இதன் படியே உடன்பாட்டை ஏற்றுக் கொண்டதற்கு அறிகுறியாக தனது முதற் கட்ட ஒப்படைப்பைச் செயற்படுத்தியது.

தில்லியரசின் சூழ்ச்சியும், உடன்பாட்டு மீறல்களும்:

இவ்வாறு புலிகள் இயக்கம் தெரிவித்திருந்ததைத் தொடர்ந்து புலிகள் இயக்கம் கருவிகளை தொடக்கத்திலேயே ஒப்படைத்துத் தமக்கு வாய்ப்பாகச் செயல்படாது என்றறிந்த தில்லியரசு, தான் உருவாக்கிய புலிகள் எதிர்ப்பு முன்னணி அமைப்பாகிய — டெலோ, பிளாட், இ. பி. ஆர். எல். எப், உள்ளடங்கிய - மூன்று விண்மீன் குழுவிற்கு முன்பே திட்டமிட்டிருந்தபடி கருவிகளை வழங்கிப் புலிகளை ஒழிக்கும் செயலில் ஈடுபடுத்தியது. இதனால் புலிகள் தங்களைத் தற்காத்துக் கொள்ளும் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். மேலும் அவ்வியக்கங்களைக் கட்டுப்படுத்தக் கோரி தில்லியரசுக்கு வேண்டுகோள் விடுத்தனர். ஆனால் அமைதி காக்கச் சென்றிருந்த இந்திய அரசுப் படைகளும், அமைதி ஏற்படுத்துவதற்காக உடன்பாடு செய்து கொண்ட தில்லியரசும் அமைதியாக வாளாவிருந்தன.

அதே காலத்தில் சிங்கள இலங்கை அரசும் உடன்பாட்டை மீறித் திரிகோணமலைப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை அறிமுகப்படுத்துவதிலும், பிற இடங்களில் தனது காவல் நிலையங்களை அமைப்பதிலும் ஈடுபட்டது. இதையும் புலிகள் இயக்கம் தில்லியரசுக்குச் சுட்டிக் காட்டியது. இதிலும் முன் போலவே தில்லி இந்தி(ய) அரசு, அமைதியையே மேற்கொண்டது.

இந்நிலையில்தான், இரு ஆளுமை வெறியரசுகளும், உடன்பாட்டில் ஏற்றுக் கொள்ளப் பட்ட இடைக்கால ஆளுமை அரசு உருவாக்கத்திற்கான செயல்களில் ஈடுபடத்துவங்கின. இதில் இந்தி(ய) அரசு தனக்குக் கைக் கூலிகளாக மாறி நின்ற ஈழ விடுதலை இயக்கங்களின் பேராளர் (பிரதிநிதி)களைக் கொண்ட பொம்மை அரசை உருவாக்க முயன்றது. இதைப் புலிகள் இயக்கம் எதிர்த்தது. தான் கூறுகின்ற பேராளர்களை அதிகமாகக் கொண்ட இடைக்கால அரசை உருவாக்க வேண்டுமென்றும் வலியுறுத்தியது. இதனை இந்தி(ய) — இலங்கை அரசுகள் முழுவதுமாக மறுத்துப் புலிகள் இயக்கம இடைக்கால ஆளுமை அரசு உருவாகுவதற்கு எதிராக, தடையாக இயங்குவதாகப் பரப்பல் போரைக் கட்டவிழ்த்து விட்டன.

புலிகளின் அறப் போராட்டமும், தில்லியரசின் கொச்சைப் படுத்தலும்:

எனவே சிங்கள அரசின் உடன்பாட்டு மீறல்களையும், பிற இயக்கங்களின் மீறல்களையும், இடைக்கால அரசு பற்றிய கோரிக்கையையும் உள்ளடக்கிய 5-கோரிக்கைகளை முன்வைத்துப் புலிகள் இயக்க அரசியற் செயலர் திலீபன் தலைமையில் 100 விடுதலைப் புலிகள் இந்தி(ய) — இலங்கை அரசுகளுக்கெதிராக உண்ணா நோன்புப் போராட்டத்தை அறிவித்து அறப்போரைத் துவக்கினர். ஆனால் தில்லியரசோ புலிகள் தமக்கு கைப்பொம்மையாகிக் கருவிகளை ஒப்படைத்து விட்டுச் செயல்பட முன் வரவில்லை என்ற ஒரே காரணியத்திற்காகப் புலிகள் மேற்கொண்ட அறப்போரை, தேவையற்ற போராட்டம் எனப்பரப்பல் செய்து கொச்சைப் படுத்தியது.

இதன் விளைவாக 12 நாள்கள் நீர்கூட அருந்தாமல் உண்ணா நோன்பிருந்து திலீபன் உயிர் துறந்தார். மேலும் திலீபன் இறப்பிற்குப் புலிகளின் விடாப்பிடியே காரணியம் எனக் குற்றஞ் சாட்டித் திட்டமிட்டபடி தனது பரப்பல் வேலையைத் தொடர்ந்தது. இதன் மூலம் தனது வல்லாளுமை வெறிக்கு நயன்மை கற்பித்தது.

விடுதலைப் புலிகளின் இறப்பும், தில்லியரசின் திட்டமிட்ட படை மோதலும்:

இதற்குப் பின்னரே இந்திய அமைதிப் படையிடம் கூறிவிட்டுப் படகில் சென்னை புறப்பட்ட புலிகள் பதினெழுவரை சிங்களக் கடற்படையினர் மடக்கித் தளைப்படுத்திக், காங்கேசன் துறையில் மீண்டும் அமைதிப்படை எனும் பெயரில் இயங்கிய இந்தி(ய) அரசுப் படைகளின் கைகளில் ஒப்படைத்தனர். அவர்களை இந்திய அமைதிப் படையினர் தமது தலைமைத் தாவடியான பலாலிக்குக் கொண்டு சென்றனர். ஆனால் இலங்கையரசு அவர்களைத் தான் கொடுத்த பொது மன்னிப்பை மீறிக் கொழும்பு உசாவல் (விசாரணை) தாவடிக்குக் கொண்டு செல்ல விருப்பியது. அதற்குத் தில்லியரசும், இந்திய அமைதிப்படையும் இசைந்தன. இதையறிந்து அதிர்ச்சியுற்ற புலிகள், இயக்கத் தளபதியாகிய மாத்தையா மூலம்,

> "எமது இயக்கத்தைச் சார்ந்த 17 விடுதலைப் புலிகளும் 'சயனைட்' நஞ்சுண்டு இறந்து விடுவார்கள். எனவே உடனே கொழும்புக்குக் கொண்டு செல்வதை நிறுத்துங்கள். அவர்கள் உயிரிழக்கும்படி நேரிட்டால் அதற்கும், அதனால் ஏற்படும் விளைவுகளுக்கும் இந்தியப் படையும், இந்திய அரசுமே பொறுப்பேற்க வேண்டும்.

என்று இந்திய அரசுக்குத் தொலைவரி (தந்தி) மூலம் வேண்டுகோளும், எச்சரிக்கையும் விடுத்தனர். இதற்கும் இந்தி(ய) அரசு அமைதி காக்கவே சயனைட் உண்டு பன்னிரு புலிகள் இறந்தனர்.

இப் பன்னிருவரில்தான் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இரு மதிப்புமிக்கத் தளபதிகளாகிய குமரப்பாவும், புலேந்திரனும் இறந்து போயினர். இவர்கள் அப்பகுதி மக்களிடையே அதிகச் சாய்காலைப் பெற்றிருந்தவர்களாவர். இப்பன்னிருவரின் இறப்பால் கிழக்குப் பகுதிகளில் சிங்களர் — தமிழர் இனக்கலவரம் உருவெடுத்தது. அதில் நூற்றுக்கும் மேற்பட்ட சிங்களர்கள் இறந்தனர். **இத்தகைய சூழ்நிலை ஒன்றைத் திட்டமிட்டே உருவாக்கிய தில்லியரசு இவ்வினக் கலவரத்தையே கரணியம் காட்டிப், "புலிகள் உடன்பாட்டை மீறி விட்டனர், உடன்பாட்டுக்கு எதிராக இயங்குகிறார்கள், எனவே அவ்வியக்கத்தைத் தடை செய்கிறோம்" என வெளிப்படையாக அறிவித்து, ஏற்கெனவே திட்டமிட்டு அமைதிப் படை எனும் பெயரில் இறக்கிவிடப்பட்டு உலவிக் கொண்டிருந்த தனது அரசப் படைகளைப், புலிகளை வேட்டையாடும் போரில் ஈடுபடுத்தியது.**

இதன் விளைவாகத் தமிழீழத்தில் தனது படை வன்முறை வழி தேசிய ஒடுககல் போரைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. அப்போர் இன்றும் தொடர்கிறது. புலிகள் இயக்கம், "கருவிகளை முழுமையாக ஒப்படைக்கின்றோம். எனவே போர் நிறுத்தம் செய்யுங்கள்" என வேண்டுகோள்களைத் தில்லியரசுக்கு விடுத்து வரும் போதிலும், இந்தி(ய)த் தில்லியரசு தன் செயல்களை அமைதியாகவே நிறைவேற்றி வருகிறது. இதன்வழி அத்தில்லியரசு நெடுநாட்களாகத் தான் எண்ணியிருந்த இலங்கை மீது தனது வல்லாளுமையை நிறுவும் திட்டத்தைச் செம்மையாகவே செய்து வருகிறது.

இச் சூழ்ச்சிகளுக்கான அடித்தளம்தான் என்ன?

1948-இல் இலங்கை விடுதலையடைந்த போது ஈழத் தமிழர்களின் பொது வாழ்வு உரிமைகள் சிங்கள இலங்கையரசின் கைகளில் ஒப்படைக்கப்பட்டதே தேசிய இனச் சிக்கல் எழுந்ததற்கான அடிப்படை ஆகும் ஆனால் இது இந்தி(ய)த் தில்லியரசின் சூழ்ச்சிகளுக்கு அடிப்படையாகி விட்டது.

இந்தி(ய)த் தில்லியரசின் சூழ்ச்சிகளுக்கு அடிப்படையாக அமைவது, தெற்காசிய பகுதியில் அதன் வல்லரசுத் தன்மையும், மேலாளுமை வெறியுமே ஆகும். எனவேதான் தேசிய இனச்சிக்கல், எழுந்த அடிப்படையைத் தனது மேலாளுமையை விரிப்பதற்கான அடிப்படையாகப் பயன்படுத்திக் கொண்டது.

1948-இல் விடுதலை பெற்ற இலங்கையின் தலைமைப் பொறுப்பேற்ற சிங்கள இனவெறி மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமையைப் பறித்ததன் மூலம் ஒரு தேசிய இனச்சிக்கலை உருவாக்கி அதை இந்தி(ய)த் தில்லியரசின் கைகளில் ஒப்படைத்தது.

மலையக மக்களின் இனச்சிக்கல் தமிழகத்துடன் தொடர்புடையதாய் அமைந்திருந்ததனது, தில்லியரசு இச்சிக்கலில் தலையிட ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தது. இதன் விளைவாக அத்தில்லியரசு 1964-இல் இலங்கையரசுடன் மலையகத் தமிழ் மக்களைத் திரும்ப தமிழகத்திற்கு அனுப்ப வைக்கும் உடன்பாட்டில் கையெழுத்திட்டு இலங்கையரசின் இனவெறிக்கு எண்ணெய் வார்த்தது.

இச் சிக்கலே இந்தி(ய)த் தில்லியரசு தலையிடுவதற்கு முகாமைக் கரணியமாக அமைந்தது. தமிழகம் 1947-இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தினால் தில்லியரசுக்கு அடிமைப் பட்டதே ஆகும்.

மலையகத் தமிழர்களின் குடியுரிமையைப் பறித்து நாடற்றவர்களாக நட்டாற்றில் விட்டதால், இலங்கை அரசின் இனவெறி வளர்ந்து ஆல்போல் தழைத்து, ஈழத் தமிழர்களின் உரிமைகளை நசுக்கத் தொடங்கியது. இதன் பிறகே மலையகச்சிக்கலாக இருந்த தமிழ்த் தேசிய இனச்சிக்கல் ஈழத்தமிழர் சிக்கலாக உருவெடுத்தது.

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம்)

ஒரு துயர மடல்!

இழிவுத் தமிழர் திருந்தும் நாள் எந்த நாளோ?

புலவர். அறிவுடைநம்பி. மூலனூர்.

மதிப்பிற்குரிய பாவலரேறு அவர்களுக்கு வணக்கம். ஐயா, அண்மைக்காலமாகத் **தமிழ்நிலம்**, **தென்மொழி** ஆகிய இதழ்களில் வரும் செய்திகளை-யும், நாட்டு நடப்புகளையும், நன்கு கவனித்து வருகிறேன். அதன் பயன், சில நேரங்களில் உள்-ளம் கொதித்துக் குமுறுகிறது; சில நேரங்களில் தாங்க முடியாத துயரமடைகிறது. கரணியம், இந்த நாட்டில் அரசு என்று ஒன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறதே அதுவும், அதில் சிலர் ஒப்புயர் வற்ற தலைவர்களாகவும், வேறு சிலர் மிகப் பெரும் அலுவர்களாகவும் இருக்கிறார்களே, அவர்களும் தாம், இந்த நாட்டையே கொள்ளையடித்து அத்திருட்டுப் பணத்தையெல்லாம் வேற்று நாட்டு வைப்பகங்களில் குவித்துக் கொண்டிருக்கிற கொள்ளைக் கூட்டங்கள் எல்லாம், பெருமையோடு உலா வந்து கொண்டிருக்கின்ற நாட்டில், ஏழை எளியவர்களிடமெல்லாம் கடுமையாக வரியைத் தண்டல் செய்து அவற்றில் பெரும் பகுதியை மேல் மட்டததில் உள்ள ஒரு சிலரின் பிழைப்புக்காகத் தண்டச் செலவு செய்தும் மற்றும் பாதியை இந்த நாட்டில் நடக்கின்ற கொடுமைகளை இழிவுச் செயல்களைக் கண்டு பொறுக்க முடியாமல் எதிர்ப்புக் குரல் கொடுக்கின்ற, வேறு வழியே இல்லையென்ற நிலை-யில், போராட்டக் களத்தில் இறங்குகின்றவர்களை அடக்கி ஒடுக்கி அல்லது அழித்து ஒழிப்பதற்காக ஆண்டு தோறும் பெருக்கிவரும் படைத்துறைக்கும் செலவழித்து விட்டுப் பெரும் பான்மையராகிய ஏழை மக்கள் ஏக்கக் கண்ணீர் வடிக்க, தந்நலத்தையே உயிர் மூச்சாகக் கொண்ட இழிபிறவிகள் இறுமாந்து வாழ்கின்ற இந்தக் கால கட்டத்தில், நமது இயக்க அன்பர்கள் பலர் பெரும் கொடுமைக்கும், இன்னலுக்கும் காவல் துறையின் கெடுபிடி-களுக்கும் ஆளாகியிருபபது, மிகவும் துயரம் தரு-கிறது. வாழ்வில் சில குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்லும் போது பல இடர்ப்பாடுகள் எதிர்ப் படுவது இயலபுதான். இருந்தாலும், எந்த மக்களின் நல்வாழ்விற்காக இன்னல்களை ஏற்றுக் கொள்கி-றோமோ, அந்தமக்களில் சிலராலேயே அவ்வின்னல் ஏற்படும் போதுதான் அது மிகப் பெரும் தாக்க மாக, துன்பம் அளிப்பதாக ஆகிவிடுகிறது. அத்தகைய துன்பங்களையும் மகிழ்வோடு ஏற்றுக் கொண்டவர்களால்தாம், எத்தனையோ இனங்கள், நாடுகள் முதலியன விடுதலை பெற்று உலக அரங் கில் தலை நிமிர்ந்து நிற்கின்றன.

அத்தகைய உணர்வுகளின் உந்துதலால்தான் சில இளைஞர்கள் ஏதோ சில விளைப் பாடுகளில் ஈடுபட்டனர். ஆனால், அவர்கள் பெரிய அளவில் வேட்டையாடப் படுகின்றனர். இந்த நேரு சிலைக்-கும், தொலைக்காட்சிக் கோபுரத்திற்கும் வெடி வைத்ததனால் இத் தமிழ்நாட்டில் ஏதோ மிகப்பெரிய விளைவுகள் நடந்து விட்டன போலப் பெரிது படுத்திக் காட்டப்படுகின்றன. அதில் தொடர்புடைய-வர்களாகத் தளைப்படுத்தப் பட்டோர் மிகக் கொடுமையாக நடத்தப் படுவதாக அறிகிறோம். இந்தத் தூயவர்கள் ஆட்சியில் பஞ்சாபில் நாளும் பல பேர் வெடிவைத்துக் கொல்லப் படுகின்றனர். அங்கு என்ன செய்தார்கள்? அவர்களை ஏன் இவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. அதற்கு என்ன கரணியம்? அங்குள்ள காவல்துறையினர் மீது நம்பிக்கை இல்லாமல் வேறு வேறு மாநிலங்களில் இருந்தெல்லாம் அலுவலர்கள் இறக்குமதி செய்யப் படுகின்ற-னர். இருந்தும் கொல்லப்படுவது நின்றதா? இல்லையே! இவர்கள் ஆளுமைத்திறமை அங்கு எங்கு போயிற்று? இங்குமட்டும் ஏன் இவ்வளவு கெடுபிடி, விரைவு, வேகம் எல்லாம். இங்கு காவல் துறையில் உள்ள பெரும்பாலான உயர் அலுவலர்களெல்லாம் தமிழராக இல்லை, தமிழராக இருப்-பவர்களும் தமிழ் உணர்வுடையவர்களாக இல்லை. பெரும்பாலும் வடவரின் கொத்தடிமைகளான, தந்நலச் சேற்றில் புரள்பவர்களாகவே இருக்கின்றனர். அவர்களிடம் மொழி, இன, நாட்டுணர்வு சிறிதள-வும் இல்லையென்றே கூறலாம். தங்கள் பதவி ஏதோ வடவரால் வழங்கப் பட்ட கொடை எனக் கருதும் உள்ளம் படைத்தவர்களாகவே உள்ளனர். அவர்கள் உடல் உள்ளம் அனைத்தும் இம்மண்ணின்

(7-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மலையகத் தமிழர் சிக்கலில் தலையிட்டதன் தில்லியரசு எச்சிக்கலிலும் தலையிடும் உரிமையைப் பெற்றுக் கொண்டது. இதன் மூலம் தில்லியரசு இலங்கை மீது தனது வல்லரசு மேலாளுமையை நிறுவ, இலங்கையைத் தனக்குச் சார்புடைய நாடாக மாற்ற வேண்டிய முயற்சிகளில் ஈடுபட்-டது.

மேலும், 1971-இல் இலங்கைத் தீவத்தின் தென்பகுதியில் சனதா விமுக்தி பெரமுன (JVP) என்னும் சிங்கள இடது சாரி "மக்கள் விடுதலை முன்னணி" மேற்கொண்ட படைக் கிளர்ச்சியை ஒடுக்க இலங்கையரசு, தில்லி இந்தி(ய) அரசின் உதவியை நாடியதும், அதன் வழி இந்தியப் படைகள் இலங்கை சென்று சிங்கள இளைஞர்களைக் கொன்று குவித்ததும், தில்லியரசின் வல்லரசு மேலாளுமை வெறிக் கொள்கைக்கு வலுவேற்றின.

(தொடரும்.)

Scanned with CamScanner

மக்களை அடக்கி ஒடுக்குவதில் வடவரின் கருவியாகப் பயன்படுவதிலேயே இன்பம் கொள்கிறது. இந்த நாட்டில் தளைப்படுத்தி உள்ளே தள்ளப் படவேண்டியவர்களெல்லாம் தலைவர்களாக உலாவரும் போது, நாட்டு நலன் இன நலன் கருதி உழைப்போரெல்லாம் கொடுமைக் காளகாமல் புகழப்படவா செய்வர்? அதிலும் கொடுமை கோடரிக் காம்பாகச் செயல்படும் இனக்கேடர்கள். இவர்கள் களைகள். இவர்களெல்லாம் களையப் படவேண்டியவர்கள். எனவே களையெடுக்க ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய மக்களைப்பாவது அணியப் படுத்திய பின்பே செயலைத் தொடங்க வேண்டும். விரைவுப்பட்டு ஏதோ எளிய செயல்களைச் செய்து இத்தகைய கொடுமைகளுக்கு ஆளாவது நமது நோக்கம் சற்று பின்னடையவே செய்யலாம். காவல் துறையின் அச்சுறுத்தல்களால் பலருடைய கருத்துப் பரப்பல்களும், வினைப்பாடுகளும். சிறிதாவது தளர்வடைய நேரலாம். முன்னணி உணர்வுடையவர்கள் இவ்வாறு கொடுமைக் குட்படுத்தப் பட்டுத் தளைப்படுத்தப் படுவதனால் அவர்களால் நடைபெற வேண்டிய வினைப்பாடுகள் எல்லாம் வீணுகின்றன.

வினைப் பாட்டின் பயன்கருதாமல் திரைப்படக் காட்சி போலப் பரபரப்பான சில செயல்களைச் செய்யும் போது அதையே கரணியமாக வைத்து இக் கொடுங்கோல் ஆட்சியாளர் இயக்கத்தையே அடக்கி ஒடுக்க நினைக்கலாம். இளைஞர்கள் உள்ளம் வேகமானது; பரபரப்பான செயல்களைச் செய்யத் துடிக்கும். அவர்கள் ஆற்றலும், ஆர்வமும் வீணுகி விடக் கூடாது. எந்த விடுதலை இயக்கத்திலும் வன்முறை தவிர்க்க இயலாதஒன்று. ஆனால் இங்கு நடைபெற்றதோ பொதுமக்களை எந்தவகையிலும் தாக்க வில்லை. இருந்தாலும், நாளும் ஒவ்வொருவரும் தங்கள் உயிர் எந்த நேரத்தில் பறிக்கப் படுமோ என்று அஞ்சி வாழும் பஞ்சாபை விடக் கடுமையான தேடல்களும், உசாவல்களும், கொடுமைகளும் இருக்கின்றன. தமிழன் தலை நிமிர்ந்து விடக்கூடாது என்பதொன்றே கரணியமாகும். இக்கேடுகளுக்கும் இழிபிறவிகளாகிய சில தமிழரே துணை செய்கிறரே. இது தான் கொடுமையிலும் கொடுமை! இந்த மண்ணிற்கு உரியவனுகிய தமிழன் ஒருவரின் சில தமிழர்களாலேயே நொறுக்கப் பட்டது. அது பற்றி ஆட்சியாளரோ அரசோ, கண்டு கொண்டதாகவே தெரியவில்லை. ஆனால் நேரு சிலைக்கு அருகில்தான் குண்டு வெடித்தது. அதற்காகத் தமிழ் நாட்டில் உள்ள ஒரு தமிழரான மாபெருந் தலைவர், "தமிழ் நாட்டில் நேரு சிலைக்கே குண்டு வைக்கும் அளவிற்கு வன்முறை வளர்ந்து விட்டது" எனக் கூறி தமது அடிமைத் தனத்தை அம்பலப் படுத்திக் கொண்டார்.

தமிழகக் காவல் துறை அதிகாரிகள் ஒன்றை உணர்ந்து கொள்ள வேண்டும். ஆங்கில ஆட்சிக் காலத்தில் அவர்கள் அடிவருடிகளாக இருந்த காவல் துறை அதிகாரிகள் சிலர் அன்றைய விடுதலைப் போராட்ட வீரர்களை எவ்வளவு கொடுமைப் படுத்தினர்! அதன்விளைவு அவர்களை எந்த நிலைக்கு ஆளாக்கியது என்பதை நினைவு படுத்திக் கொள்ள வேண்டும். குமுகக் கேடர்களாகிய, கொலைகாரன், கொள்ளைக்காரன் முடிச்சு அவிழ்த்துத் திரியும் முரடர்கள் ஆகியோரைப் போல எண்ணி, விடுதலை மறவர்களையும் கொடுமையும், சிறுமையும் செய்வார்களானல் அதன் விளைவு மிகவும் கேடாகத்தான் இருக்கும். வரலாறு என்பது ஒரே மாதிரியே இருப்பதில்லை. மாறக் கூடியது. விடுதலைப் போராட்டக் காலத்தில் மிகக் கொடுமையாளர்களாகக் கருதப் பட்டவர்கள் இன்று விடுதலைக்குப் போராடிய மாவீரர்களாக ஆக்கப் படவில்லையா? உயர் அதிகாரிகளாக அன்றிருந்த வெள்ளையர்கள் சிலர் வெளியேறி விட்டார்கள். ஆனல் தமிழ் நாட்டில்தமிழனுக இருக்கும் அலுவலர்கள் அத்தகைய பழிக்கு ஆளானல், அவர்கள் என்றும் தமிழ் நாட்டில்தான் இருக்க வேண்டும். அவர் இறந்து போனலும் அவருடைய மரபினர் இங்கிருப்பார்கள். கட்டிக் கொடுத்த கயமைத்தனத்திற்கு எட்டப்பன் எவ்வாறு எடுத்துக் காட்டாகி விட்டானே, அது போல இனக் கேடர் மரபினர் என்ற பழியைத் தம் மரபினர்க்கு உண்டாக்கிவிடக் கூடாது. வேற்று மொழியினர் கொடுமை செய்யத் துணிவராயின் பஞ்சாபை நினைவு படுத்திக் கொள்ளட்டும்.

எவ்வாருே, என்னவோ நடந்து சில உணர்வு மிக்க வீரமறவர்கள் வெஞ்சிறையில் வாடுகின்றனர். அவர்களில் பலர் அரசு அலுவலர்களாகப் பணியாற்றியவர்கள். அவர்கள் ஊதியம் இழந்துவிட்டபடியால் அவர்கள் குடும்பம் இன்னல் அடையலாம். எத்தகைய முயற்சியைச் செய்தேனும் அவர்களை விடுதலை பெறச் செய்ய வேண்டியது நம்மவர் அனைவரின் பொறுப்பாகும். அதற்குப் பொருள் ஏந்துகள் தேவைப் படலாம். அதற்கும் அனைவரும் தங்களால் முடிந்த அளவில் பொருளுதவி செய்வது அனைவரின் தலையாய கடனுகும். தமிழன் தன்னலச் சேற்றிலும் பொருமைப் புதை குழியிலும் சாதி வேறுபாட்டுப் பள்ளத்திலும் ஆழ்ந்தே அழிந்து போய்க் கொண்டிருக்கிறன். இந்தக் கால கட்டத்திலாவது, சிலருக்கேனும் முருகலான விடுதலையுணர்வு தோன்றியிருப்பது வரவேற்று வளர்த்தெடுக்க வேண்டிய ஒன்றுகும். அதை வல்லாண்மை கொண்ட அரசு அடக்க முயல்வது இயல்புதான். பலர் இன்னல்களை ஏற்றுத்தான் ஆகவேண்டும் என்பதும் இயல்பே. அவ்வாறு இன்னல்களைத் துணிவோடு ஏற்க முன்வந்தவர்களுக்கு உரிய வழிகளில் நாம் துணையாவது நிற்க வேண்டாமா? அவர்களுக்குத் துணை நிற்கப் பலர் இருக்கின்றனர்

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

என்ற உறுதியைத் தெரியப் படுத்த வேண்டாமா? எல்லாரும் தீவிரமான போராட்டத்தில் கலந்து கொள்ள இயலாதுதான். இருந்தாலும், போராடத் துணிந்து முன் வருபவர்களுக்குப் பின்னுல் நின்று ஒத்துழைப்பாவது கொடுக்கலாமன்றே? பொருள் வடிவில் ஒத்துழைப்புக் கொடுப்பது முகாமையானதாகும். தங்களது வாழ்வு ஏந்துகளையெல்லாம் ஈகம் செய்து போராட்டத்தில் கலந்து வெஞ்சிறையில் கொடுந்துன்பங்களைத் தாங்கிக் கொண்டு இருக்கிறுர்கள். அதுவும் யாருக்காக அவர்கள் சொந்த நலனுக்காகவா? நம்மைப் போன்ற அனைத்து, இன மக்களாகிய தமிழர் நலன் கருதித்தானே.

அதனுல் நம்மால் இயன்ற வகையில் உதவுவதுதானே முறை, பண்பு, மாந்த உணர்வு, சில கோத்தடிமைப் புல்லறிவாளர் பேசித் திரிவதைப் போல "அவர்கள் ஏன் அவ்வாறு செய்கிறுர்கள்? அஃது ஒருமைப்பாட்டிற்கு ஊறு செய்வதாகாதா?" என்று உணர்வுடையோரும், தன்மானம் மிக்கோரும் இன வுணர்வுடையோரும் இவ்வாறே இருப்போமேயானுல், இவ்வினம் என்றுதான் விடுதலை பெறுவது? இப்பணிகள் யாரோ ஒருவருடைய னவோ, சிலருடையனவோ மட்டுமல்ல; அனைவரின், தமிழராகப் பிறந்த அனைத்து மக்களின் பிறவிக் கடமை. சிலர் அறியாமையாலோ, தந்நலத்தாலோ மாறுபட்டு இருக்காலம். அதை நாம் பொருட்படுத்தக் கூடாது. பிறந்தவர் இறப்பது உறுதி. அவ்விறப்பும் ஒரு முறைதாம். தெருநாய் போல் செத்தொழிவதைவிட பொதுநலன் கருதி, ஏற்பட்டதாக இருக்கட்டுமே. ஒவ்வொரு நாளும் நேர்ச்சிகளால் எத்தனையோ பேர் இறக்கின்றனர். அவர்கள் குடும்பம் வாழ்வதில்லையா? — 'செயற்கரிய செய்வார் பெரியர்' — என்று வள்ளுவர் கூற வில்லையா? அத்தகைய செயற்கரிய செயல்களைச் செய்ய எண்ணிச் செயல்பட்டுச் சிறு தவறுகள் கரணியமாகத் தளைப் படுத்தப்பட்டுள்ள மாவீரர்களைப் பாராட்டி மகிழ்வதோடல்லாமல், அவர்கள் விடுதலை பெறவும் ஆவனசெய்வோம்; நம் போன்றவர்கள் துணை நிற்போம். தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களாகிய நீங்கள் ஆவன செய்யுங்கள். நாங்கள் அதற்கு உறுதுணையாவோம். இயக்க அன்பர்கள் அனைவரும் இந்த உணர்வோடு செயல் பட வேண்டும். இன்று இது போன்ற வினைப்பாடுகளில் யாருக்கோ வந்ததாக எண்ணிச் செயல் படுவோமானுல் நாளை நமக்கு இத்தகையதொரு நிலை தோன்றுது என்பது என்ன உறுதி? நமக்காக மட்டுமன்றி நாட்டிற்காகவும் சிறிது செயல்படுவோம் என எண்ணம் கொண்டு செயல் பட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறுேம்.

சிறையில் உள்ளவர்களை வெளியில் கொணரவும், வழக்கு நடத்தவும் பொருளுதவி செய்யுங்கள். ஆசிரியர், தமிழ்நிலம்.

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

போரில் இறந்த இந்திய வீரர்களை விட அதிகமான வீரர்கள் இலங்கையில் இறந்து விட்டனர்.... இந்திய—இலங்கை ஒப்பந்தம் ஒரு முழுத் தோல்வியாகும் இலங்கை உரிமை(சுதந்திர)க் கட்சி ஆட்சிக்கு வந்தால் இந்திய—இலங்கை ஒப்பந்தம் நீக்கப்பட்டு விடும்."

இவரின் இந்தப் பேச்சுக்குத்தான், தீட்சித் **"இந்திய — இலங்கை ஒப்பந்தத்தை நீக்கி விட்டுப் புதிய பேச்சுகளைத் தொடங்கினுல், தனி ஈழம் உருவாவதைத் தடுக்க முடியாது."** என்று விடை தந்து பேசினுர்.

எதை மனத்தில் வைத்துக் கொண்டு தீட்சித் இப்படிப் பேசினுரோ, தெரியவில்லை, ஆனுல் அவர் சொன்னபடி **'இந்திய — இலங்கை ஒப்பந்தம் தவிர்க்கப் பட்டுத்தான் போகும் என்பதில் ஐய மில்லை. அதன்படி, தனிஈழமும் உருவாகித்தான் தீரும். இதை யாராலும் தவிர்த்து விடமுடியாது."**

தெரிந்தோ தெரியாமலோ, அனில் சிங்கேவும் தீட்சித்தும் இந்த உண்மையை உறுதிப் படுத்திக் கூறியதாகவே நாம் கருதுகிறுேம்.

ஒழிக இலங்கை — இந்திய உடன்பாடு!
வாழ்க தனித்தமிழ் ஈழம்!

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து பர். து. மூர்த்தி (தமிழ்நாடு) பி. எம். பத்மநாபன் (கேரளா) பர். ரவிசின்கா (குசராத்) இசுமாயில் (கர்நாடகா) ஆகியோர் விளக்கவுரை நிகழ்த்தினர்.

மாலை 5 மணியளவில் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலிருந்து பாசிச எதிர்ப்பு இயக்கத்தின் பேரணி கிளம்பி அரசு மருத்துவமனை, பெரியார் நகர், பன்னீர்ச் செல்வம் பூங்கா, உந்து நிலையம் வழியாக வ. உ. சி பூங்காவை அடைந்தது.

வ. உ. சி பூங்காவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு பாசிச எதிர்ப்பு இயக்க முன்னவர் பி. வி. இராமானுசம் தலைமை தாங்க அசீதன், நெடுமாறன், சியார்சு பெர்ணுண்டசு ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

இறுதியில் தோழர் பூபதி நன்றியுரையாற்றிய பின், மாநாடு நிறைவுற்றது.

அன்பர்கள் கனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறுேம்.

— அமைச்சர்

Scanned with CamScanner

மார்க்சியம் வேறு; இந்தியப் பொதுவுடைமை வேறு!

நாள் தோறும் செய்தியிதழ்களைப் படிக்கிறோம். இந்திய நாட்டுச் செய்திகளையும் நாளிதழ்கள் தருகின்றன. அவை முழுமையாக உண்மை விளக்கங்களைத் தருவதில்லை. இருப்பினும் வெளியிடப்படும் செய்தியை ஆய்வு செய்வதன் மூலம் உண்மை நிலைகளை நம்மால் அறிய முடியும். அதன் அடிப்படையில் கூர்க்கர் போராட்டத்தைப் பற்றி ஓரளவு அறியலாம்.

கூர்க்கர்கள் தமது கோரிக்கையாகத் தனி மாநிலம் கோருகின்றனர். கூர்க்கர் என்பவர் இந் நாட்டில் வாழும் ஒரு தேசிய இனம். இவர்கள் பெரும் பான்மையாக வாழ்வது மேற்கு வங்காள மாகாணத்தில் உள்ள தேயிலை விளையும் டார்சிலிங் கும், அதை ஒட்டியுள்ள தேயிலை மலைத் தோட்டப் பகுதியுமாகும்; கூர்க்கர்களின் தாய்மொழி நேப் பாளி. இவர்கள், இடது பொதுவுடைமைக்கட்சி ஆட்சிபுரியும் மேற்கு வங்காள மாநிலத்தில் வாழும் சிறுபான்மையினர். இவர்களுக்கு உரிய கல்வி, தொழில் வசதி, பெரும்பான்மை வங்காளி தேசிய இனத்தின் படிநிகராளியான முதல்வர் சோதிபாசுவால் மறுக்கப்படுவதாய்க் கருதுகின்றனர்.

டார்சிலிங் மலைப்பகுதிகளில் உள்ள ஒரே தொழில் தேயிலைத் தோட்டங்களில் கூலி வேலை செய்தல், குறிப்பாகத் தேயிலை பறித்தல். அக்கூலி வேலை செய்பவர்கள் கூர்க்கர். ஆனால் தேயிலைத் தோட்ட முதலாளிகள் வங்காளிகள். பறித்த தேயிலையைப் பொடியாக்குதல், பைகளில் நிரப்பி வணிகத்திற்கு அனுப்புவது போன்றவை, சமதரை நகரங்களில் வங்காளி முதலாளிகளின் தொழிற்சாலைகளில் நடைபெறுகின்றன. டார்சிலிங்கில் தேயிலை பறிப்பதோடு சரி ; தேயிலைக்கு விலை உறுதி செய்வது வங்காளி முதலாளிகளே. மேற்கு வங்க இடது பொதுவுடைமை அரசு ''கூர்க்கர்கள்'' ஒப்போலையாளர் எண்ணிக்கையில் சிறுபான்மையினராய் உள்ளதால், பெரும் பான்மை ஒப்போலையாளர்களாய் உள்ள வங்காளிகளை ஒப்போலைக்காக அவர்களின் நல்லெண்ணத்தை ஒப்போலைச் சீட்டுக் களின் மூலம் பெறுவதற்காகக் ''கூர்க்கர்களின்'' போராட்டத்தைத் தேச ஒற்றுமைக்குக் குந்தகம் என்ற போலி முழக்கத்தால் நசுக்கி வருகிறது.

வங்காளி பேரினக்கார சோதிபாசு, டார்சிலிங் மலைப்பகுதியில் குவித்துள்ள வங்காளிக் காவல்துறை, நடுவண் காவல்துறை, படைத்துறை சிறுபான்மை தேசிய இனமான கூர்க்கரை முழு மூச்சுடன் ஒடுக்க ஈடு பட்டுள்ளதை யாராலும் மறுக்க முடியாது. சிறுபான்மையோரின் நலன்களைக் காப்பாற்றப் பிறவி எடுத்துள்ளதாய்ப் புளுகும் ''இடது பொதுவுடைக் கட்சி'' டார்சிலிங்கிலும் அதனைச் சூழ்ந்துள்ள தேயிலைத் தோட்டங்களிலும் தன் கட்சிக் குண்டர்களைப் படைக்கருவிகளுடன் ''மொசாத்'' போல் இயங்க அரசு இயந்திரத்தைத் தவறாகப் பயன் படுத்தி வருகிறது. சோதிபாசு குண்டர்களின் அரம்பத்தனத்தால் நாளும் அத் தேயிலைத் தோட்டங்களில் கூலி வேலை செய்து வரும் ஏழைக் கூர்க்கர்களின் அன்றாடக் கூலி நலிக் கப்பட்டுப் பட்டினியும் பசியுமாய்க் கேழிரக்கூண்டு போன்ற வீடுகளில் செத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கு ஏற்பட்டுள்ள பட்டினிச் சாவுகள் வங்காளி சோதிபாசுவிற்குத் தெரிவதற்கு நாயமில்லை. ஏனென்றால் பட்டினியால் செத்தவர்கள் கூர்க்கர்கள் தாமே ? அதுவே வங்காளிகளின் சாவாக இருப்பின் இந்த முகமூடித் திருடர்கள் தில்லியில் ஒரு பேரணியே நடத்தியிருப்பர்.

கூர்க்கர் கோருவது தனிமாநிலம். இது இந்திய அரசியல் அமைப்புக்குட்பட்டது. இந்தியா உரிமை அடைந்தபின்பு புது மாநிலங்கள் தோன்றவேயில்லை யென்று வங்காளி சோதிபாசுவால் கூற முடியுமா ? கூர்க்கர்களின் அரசியல் உரிமையைப் பறிக்கும் 'பாசிச' சோதிபாசு எவ்வாறு போராடும் ஈழத் தமிழரின் தேசிய இனச் சிக்கலுக்கு ஆதரவு கொடுப்பார் ? மார்க்சிசயத்தின் நேரடிக் கருத்தாளர் என்று தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ளும் இடது பொதுவுடைமைக் கட்சி எவ்வகையில் திபேத்தியரின் தன் ஆளுமை (சுய நிர்ணய) உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவு தரும் ? ஆனால் பாலசுத்தீன விடுதலைப் போராட்டம், நிகரகுவா தென் ஆப்பிரிக்கா, அங்கோலா மற்றும் பிற ஆப்பிரிக்க நாடுகளில் ஏற்பட்டுள்ள தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டத்திற்கு இக்கட்சி ஆதரவு கொடுப்பதெலாம் பேய் வேதம் ஓதிய செயலாய்த் திகழ்கிறது.

—முகவை சிந்தனை வட்டம், பரமக்குடி.

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தும் தாங்கள் திட்டங்களை மறந்து விடுகிறார்கள். நாட்டில் சிற்றூர்ப்புறங்களுக்கும் நகர்ப் புறங்களுக்கும் வேற்றுமைகள் அதிகரித்து வருகின்றன. இது குடியரசு அமைப்புக்கே தாக்கத்தை ஏற்படுத்துவதாகும். சிற்றூர்ப்புறங்களில் உள்ளவர்கள் எல்லா நிலைகளிலும் மிகப் பின்தங்கிய நிலைகளில் உள்ளனர்.

— குத்தீட்டி.

இருபத்து மூன்று மறவர்கள் கடந்த நான்கு மாதங்களாகச் சிறையில் வாடுகின்றனர்.

தொல்தமிழ் நாட்டை மீட்பீர்!

பாவலர். தமிழ்க்குமரன், ஈரோடு

மொழிவழி இனமும் நாடும்
முகிழ்த்ததே வரலா றாகும்.
வழிமாற்றி அதைவ டக்கர்
வல்லாண்மை செலுத்து கின்றார்;
பிழிந்துநம் உழைப்பை நம்மைப்
பீடழித் தொதுக்கு கின்றார்!
அழிந்துநம் உணர்வ வர்க்கே
அடிமைசெய் திழிய லாமா?

எழுந்துநாம் நடக்கொ ணாமல்
இடுப்பினை ஒடித்துப் போட்டார்!
விழுந்தநாம் வீறு பெற்று
விரைந்தெழ மருத்து வஞ்செய்
பழுத்தநற் புலவ ரான
பாவல ரேற்றைப் போற்றிக்
கொழுத்திடும் பகையை ஓட்டிக்
கொற்றத்தை மீட்க வாரீர்!

உணர்வுகள் அழிந்து நீவிர்
உரிமைகள் பேணி டாமல்
பிணங்கியே தேசி யத்தைப்
பேசிஏ மாற லாமா?
வணங்கித்தாள் வடவ ருக்கே
வல்லடி மைசெய் யாமல்
மணந்திடப் புகழ்எ ழுந்து
மண்மீட்டு நிமிரு வீரே!

மனக்குகை தனில்சி றுத்தை
மதர்த்தெழ வீறு கொண்டு
கனன்றெழு வீர்இப் போதே
கயமையர் தம்மை யோட்டி
இனநலம் பேணி நாட்டை
இவரிட மிருந்து மீட்பீர்!
எனக்கென்ன என்றி ருந்தால்
இழிந்துநீர் அழிந்து போவீர்!

இந்துமுன் னணியைச் சேர்ந்த
இராம கோ பாலன் என்பான்
வந்திங்கு கதைய ளந்து
வரலாற்றைத் திரித்துக் கூறிச்
சொந்தங்கொண் டாடு கின்றான்
தொல்தமிழ் நாட்டை! நீவிர்
சிந்தையில் இதைப்ப தித்தத்
திருடனை ஓட்டி வைப்பீர்!

நான்குபார்ப் பனர்கள் இன்று
நாவீறு காட்டி வந்தே
ஊன்றிக்கால் தமிழி னத்தை
ஒறுத்தழித் திடவே பொய்யாம்
சான்றுகள் நிறுவு கின்றார்
தமிழ்நாடு தம்நா டென்று!
தோன்றிவந் துரிமை பேணித்
தொல்தமிழ் நாட்டை மீட்பீர்!

உ.த.மு.க. வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 26

இன எதிரியைத் தற்காலத்தில் மட்டும் வைத்து மதிப்பிடக் கூடாது; இறந்த, எதிர் காலத்திலும் வைத்து மதிப்பிட வேண்டும்

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண் - 108;

நூல் அஞ்சல்

அனுப்புதல்:

தமிழ்நிலம்

5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829;

உறுப்பினர்:

தனி இதழ் விலை	உரு. 1-00
ஆண்டுக் கட்டணம்	உரு. 50-00
அரையாண்டுக் கட்டணம்	உரு. 25-00

பெறுநர்:

திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5:

TN/MS (C) 657

Scanned with CamScanner